பொய்யாமொழி

ஆசிரியர்—ர. பாஸ்கரனார்.

செய்யா மொழிக்குந்திருவள் ளுவர்செய்த
'பொய்யாமொழி'க்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

18 NOV 1950 MADRAS

கதிர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1981, ஐப்பசி 23 (8—11—50) புதன்கிழமை | மணி 11

தமிழா கேள்

வ. பழனிச்சாமி.

உலகினிலே உன்னதமாய் இருந்த நாடு
ஒன்றேன்று அறிஞர்கள் சொல்லக் கேட்டால்
தயங்காமல் தமிழ்நாடு என்றே சொல்வோம்
என்றுரைத்த தமிழரின் வீரம் இன்று
இழிநிலைக்கு வந்துளதை எண்ணிப் பார்ப்பாய்!
மூவேந்தர் கள்ஆண்ட முத்தமிழ் நாடு,
உலகிலே உயர்வாக உலவு கின்ற
உந்தன்மொழி திருக்குறளை பெற்ற நாடு.

வனப்புமிக் கசோலைகள் நிறைந்த நாடு
பஞ்சத்தை அறியாத பழந்தமிழ் நாடு
பாழ்நிலைக்கு வந்துளதை எண்ணிப் பார்ப்பாய்!
என்றுமே மக்களுக்கு எடுத்து ரைக்கும்
"பொய்யாமொழி" என்னும்பொய் மையில் வல்ல
வாரபத்திரி கைவளர்ந்து மக்க ளுக்கு
அடிமையைப் போக்கிஆண் மையுண் டாக்கி
வளர்கவைத் தில்வளர்மதி யம்போ லவே.

வார இதழ். ★ விலை அணு 1.

வாழ்த்துச்செய்தி

ம. செ. கிருட்டினன்
குருவாலப்பர்கோயில்.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

செங்கமல மலர்போல் பூத்துக்குலுங்கும் பொய்யாமொழி என்ற வார மலரைத்தாங்கள் மலரச் செய்ததைக்கண்டு மட்டிலா மகிழ்ச்சி அடைவதோடு

தருமம் தழைத்தத்தமிழ் நாட்டில்
தாமரை மலர் போல் நீ ஏட்டில்

மதவெறி கொடுமையை நீமாற்றி
மக்களின் நலத்தை மென் மேலேற்றி

ஒற்றுமை வாழ்க்கையே உன்னுயிராய்
உண்மை மொழியே நீஒளிர்வாய்

எத்திசையும் உன்புகழ் மணக்கநீ
என்றென்றும் வாழ் பொய்யாமொழியே.

வாழ்க பொய்யாமொழி! வாழ்க திராவிடம்!!
வாழ்க தமிழ்!!!

சென்னை மாகாண
தாழ்த்தப்பட்டோர் சம்மேளன
மகாநாடு.
31—12—50 ஞாயிறன்று வேலூரில் நடைபெறும்.

அன்புடையீர்!

சென்ற 8—10—50ல் வேலூரில் நடந்த கமிட்டி கூட்டத்தின் தீர்மானப்படி சென்னைமாகாண தாழ்த்தப்பட்டோர் சம்மேளன மகாநாடு வருகிற டிசம்பர் 31உ ஞாயிற்றுக்கிழமை வேலூரில் நடைபெறும் எவ்வித காரணத்தாலும் தேதியை மாற்றிவைக்கப்பட மாட்டாது ஆகையால் தாழ்த்தப்பட்டோர் பெருமக்கள் யாவரும் திரளாக வந்து மகாநாட்டை சிறப்பிக்க எல்லா கிராம, பட்டணங்களிலும் இதுபற்றி பொதுமக்களிடம் தெரிவிக்கவும். மகாநாட்டிற்காக நன்கொடை வசூலித்துள்ளவர்கள் வசூல்பணத்தையும், ரசீது புத்தகத்தையும் உடனே கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

குறிப்பு:— தலைவர்களிடம் கடிதப் போக்கு வரத்து நடைபெற்று வருகிறது. 5—11—50 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு வேலூர் டவுன் ஹாலில் சென்னை மகாண மகாநாட்டு கமிட்டி அங்கத்தினர்களும் இயக்கத் தோழர்களும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இங்ஙனம்,

கஸ்பா, ஆம்பூர்,
24—10—50.

K. M. சாமி.
M. கிருஷ்ணசாமி,
R. T. S. மூர்த்தி,
செயலாளர்கள்.

வள்ளுவரும

K. பாலகுரு.

★

கற்பு என்ற நமது கட்டுரைக்கு மறுப்பாக திருக்குறளை மேற்கோளாகக் காட்டி நமது தோழர் ஒருவர் ஒரு நீண்ட மறுப்பு எழுதியுள்ளார். அதில் நாம் "வள்ளுவர்" ஒரு பெண்ணாக இருந்து குறள் எழுதியிருந்தால் இக்கருத்துகளை கூறியிருக்க மாட்டார் என்று குறிப்பிட்டிருந்ததற்கு நமது தோழர் அதை ஒருவாறு ஒப்புக்கொண்டு தன்னலங்கொண்ட ஒரு கூட்டத்தார் ஏற்றுகொள்ளவில்லை ஆனால் நீதியானது அநியாகிவிடுமே என்று பதில் கூறியிருக்கிறார்.

இங்கு பெண்களை தன்னலங்கொண்ட கூட்டத்தார் என்று குறிப்பிட்டது பெண்களுக்கு நீதி வழங்கியதாகும் என்பதை யோசிப்பதோடு பெண்கள் தர்மம் எழுதுவதில் ஆண்கள் இம்முறை கொண்டு பிரவேசிப்பது தன்னலங்கொண்ட தாகாதா? என்பதையுஞ்சிந்திக்க வேண்டுகிறோம் (இந்த இடத்தில் 'கருத்து' இன்னது என்பதை முடிவு கட்டாவிட்டாலும்) தமிழ் நாட்டில் வாழ்ந்த—வாழ்கின்ற பெண்ணரசிகளும் அக்கருத்துகளை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்று எழுதியிருக்கின்றார்கள். எந்தப் பெண்ணரசியாகிலும் தம்மை ஆண் பிறவிக்கடிமையென்றுவது தாம் அப்பிறவிக்கும் கீழ்பட்டவர்கள் ஏற்றுவது ஆண்தன்மையைவிட பெண்தன்மை ஒரு கடுகளவாவது தாழ்ந்தது என்றுவது எண்ணிக்கொண்டிருப்பார்களானால் அவர்கள் யாராயிருந்தாலும் அவர்களை பெண்ணரசி என்று சொல்ல நாம் ஒருக்காலும் ஒப்போம்.

"பலதலைமுறைப் பழக்கத்தால் பெண்கள் அக்கருத்துக்களை ஏற்றுக்கொள்வது போலாகும்" என்பதற்கு ஒப்பிட்டு நாம் எழுதியிருப்பதும்" தாய்மார்களை பழித்துக்கூறியதாகும் என்று நமது தோழர் கூறியிருக்கின்றார்.

அதற்குகாரணம் காட்டுவதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அறிவு வளர்ச்சிக்குரிய சாதனங்கள் கிடைக்கவொட்டாமல் செய்து விட்டதால் அன்னார் அறியாமை உடையவராகி விட்டார்கள். பெண்களுக்கு அது பொருந்தாது என்றும் நமது தோழர் சொல்லுகிறார். இதை அவர் ஆராய்ச்சியுடன் கூறியிருப்பதாக நாக்கு விளங்கவில்லை ஏனெனில் எந்தக்காலத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் என்கிற கூட்டம் ஏற்பட்டதோ எந்தக் காலத்தில் எந்தக் கூட்டத்தார்கள் தாழ்த்தப்பட்டோருக்கு அறிவு வளர்ச்சிக்குரிய சாதனங்கள் இல்லாமல் செய்தனரோ அக்காலத்திலேயே அந்தக் கூட்டத்தாராலேயே பெண்மக்களுக்கும்.

தொடரும்.

நீங்கள் பொய்யாமொழியின்
★ ★ ★ சந்தாதாரரா..?
இல்லையேல் இன்றே சேருங்கள்!

அறிவும்.

சொல்லேருழவன்.

★

[முன்தொடர்ச்சி.]

ஒரு சமூகம் உயர முயற்சி செய்வதைக்கண்டு நீங்கள் பொறாமைப்பட வேண்டிய அவசியமில்லை. அதனால் உங்கள் சமூகத்திற்கு முட்டுக்கட்டை ஏற்படுகிறதென்றால் அதற்கு யார் என்ன செய்வது? அது காலக்கடவுளின் செயல்! மாகம் என்ற ஒரு வடமொழிக் கவி கூறியதைக் கேளுங்கள்!

அல்லி குவிகின்றன.
தாமரை மலர்கின்றன.
கோட்டான் அடங்குகிறது.
சக்கரவாளம் முழங்குகிறது.
சந்திரன் மறைகிறான்.
சூரியன் உதயமாகிறான்.

இப்படியே ஒன்றின் முன்னேற்றம். மற்றொன்றின் பிற்போக்காக முடிகிறது, தாமரை மலருங்காலையில் அல்லிக்குவியும் நேரமாகிவிடுகிறது. இதனால் அல்லி தாமரையைக் கோபித்துப் பயன் என்ன? எங்கள் சமூகத்தை நீங்கள் குறைசொல்ல வேண்டுமானால் "கறிவேப்பிலைகள்" என்று வேண்டுமானால் திட்டுங்கள். கூடிய சீக்கிரம் கொத்தமல்லியாகி பித்தத்தைத் தீர்த்து விடுகிறோம்.

திருக்குறள் மோகங்கொள்ளும் திருவாளர்களைக் கண்டு திடுக்கிடும் தோழர்களே! காலத்தின் வேகத்தைக் கண்டு கவலைப்படுவதால் என்ன பயன்?

வள்ளுவர் கூறிய "வாலறிவன்" என்ற பதத்திற்கு (வால்-வாலையுடைய, அறிவன்-அநுமான்) என்று எனது நண்பர் ஒருவர் கூறிய அர்த்தமும் பொருத்தமாகத்தான் இருக்கிறது. அநுமார் நவ வியாகரணத்தில் பண்டிதரல்லவா? திருக்குறள் எவ்வளவு வேறுபட்ட மனப்பான்மை யுடையவர்களுக்கும் தத்தமக் கேற்றார் போல்அர்த்தம் செய்துகொள்ள இடம் அளிக்கிறது.

வகுப்பு உரிமையை வகுப்புவாதம் என்றுகூறி அதற்கும் தலைகீழ் அர்த்தம் செய்யப்படுகிறது. இஃது ரயிலுக்குப்போக நேரம் தவறியவர்கள் ரயில் தவறி விட்டது என்றுகூறும் வழக்கம்போல் ஆகிவிட்டது. விஷப்பாம்பை நல்லபாம்பு என்றுகூறும் உலகம் எதை எப்படித்தான் கூறாது! வகுப்பு என்பதை முதலில் உண்டாக்கியது யார்? ஜாதி என்ற பதம் தமிழில் உண்டா? "ஜாதி" என்ற சொல் வேதத்தில்கூடக் கிடையாது. என்று தயானந்த சரஸ்வதி கூறி இருக்கிறார். பாரதநாட்டில் உள்ள வேதாகமங்களில் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்கள் இருப்பதால், இதில் இடைச்செருக்கல் கலந்திருக்கிறது என்றுதான் தயானந்த சரஸ்வதி அவர்கள் பெர்லினுக்குப்போய் அங்குள்ள பழமையான நூல் நிலையத்தில் உள்ள நாற்பதினாயிரம் வடமொழி நூல்களைப் புரட்டி அதிலுள்ள வேதங்கள் தான் முரணான கருத்துக்கள் இல்லாதது என்று கண்டறிந்த தயானந்தர் அதை இந்திய மொழிகளில் பெயர்த்தெழுதினார், அப்பெரியவர்! அன்னாரின் மொழிபெயர்ப்புகள் முடியுமுன்னரே மகான்களைக் கொல்வதற்கென்றே நம் நாட்டில் ஓர் புல்லுருவி முளைத்து வருகிறதல்லவா? அக்கூட்டத்தினர் அவரையும் கொன்று தீர்த்தார்கள்! மகாத்மா காந்தியடிகளைப்போல் இறந்த தயானந்தர் ஜாதி என்ற சப்தம் வேதத்தில் இல்லை என்றார்! உண்மையைச் சொல்பவனுக்கு இவ்வுலகத்தில் இடம் ஏது? நாய்க்குடலுக்கு நறுநெய் தங்குமோ?

வகுப்பு என்பதை உண்டாக்கிவிட்டு பரம்பரையாய் அதன் சுகத்தை அனுபவித்து விட்டு இப்பேது அது வாதனை செய்கிறது என்றால் யார் என்ன செய்வது? வகுப்பை அழித்துவிட்டால் வாதத்திற்கே இடமில்லையல்லவா? கொள் என்றால் வாயைத்திறப்பது கடிவாளம் என்றால் வாயை மூடுவதா?

இந்தியக்குடியரசுச் சட்டத்தில் அனைவருக்கும் சம உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. சில ஆண்டுகள்வரையில் தாழ்த்தப்பட்ட வகுப்புகளுக்கு சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது; அவர்கள் ஓர் சமநிலை அடைய வேண்டுமென்பது தான் சலுகைக்குக் காரணம். பிற்போக்குள்ள மற்றவர்களும் சில ஆண்டுகள் வரையில் சலுகை பெற்றால்தான் எல்லாரும் ஓர்குலம், ஓர் இனம் எல்லோரும் இந்நாட்டு மக்கள் ஆகமுடியும், இந்நிலைக்கு நாடு வருவதை யார் எப்படி மறைமுகமாகத் தடுப்பினும் எந்த சாணக்கியத்தை உபயோகித்து முட்டுக்கட்டை போட்டாலும் எதிர்பார்க்கும் பலனுக்கு நேர்மாறான பலன்தான் கிடைக்கும் என்பது என்போன்றாரின் தாழ்மையான அபிப்பிராயம். —தொடரும்.

— சென்ற இதழ் தொடர்ச்சி —

மகாபாரதம்

வில்லிதரும் விளக்கம்,

ஆதிபருவம்] [குருகுலச்சருக்கம்

ஆசிரியர் U. S. இராமசாமிப் பிள்ளை செயங்கொண்டம்.

—:—

முன்பு சந்திரனது சிறப்புக்கூறிய செய்யுளைப்பற்றி ஆராய்ந்தோம் இப்போது மீண்டும் சந்திரனது பிறப்புப் பற்றி வேறு விதமாகக்கூறுகிற செய்யுளைப்பற்றி ஆராய்வோம்.

அச்செய்யுள்;—

"பத்திரட்டியி லீரெண் டொழிந்த பல்கலையோன்
மித்திரற்கவை கொடுத்துமுன் மீளவுங் கவர்வோன்
அத்திரிப்பெய ரந்தணன் அம்பகந் தனிலும்
சித்திரக்கனல் முகத்தினும் பிறந்தொளி சிறந்தோன்"

என்பதாம்.

இதில் சந்திரன் பதினாறு கலைகளையுடையவன் என்றும், அக்கலைகளைத் தேய்பிறைக்காலத்தில் தினம் ஒவ்வொரு கலையாகச் சூரியனுக்குக் கொடுத்து, வளர்பிறைக்காலத்தில் தினம் ஒவ்வொரு கலையாகத்

8-ம் பக்கம் பார்க்க.

பொய்யாமொழி
ஆசிரியர். ம. பாஸ்கரனர்

கதிர் 1 } 1981, ஐப்பசி 23 புதன். { மணி 11

"வானின்றுலகம் வழங்கி வருதலால் தானமிழ்தம் என் றுணரற் பாற்று"

வான் — மழையானது, நின்று (நடுவே நீங்காது) நிற்க உலகம் உயிர்களானவை வழங்கி வருதலான், நிலை பெற்றுவருகையினுலே; தான் (அம்மழை) தான்–அமிழ்த மென்று (உயிர்களுக்கு) அமிர் தமென்று, உணரற்பாற்று — அறியப்படும் தன்மையையுடைத்தாம்.

மழை நீங்காமற் பெய்ய உயிர்கள் நிலைபெற்று வருகையால் அம்மழை உயிர்களுக்கமிர்தம் என்ப தாம். உயிர்களை நிலைபெறச் செய்கிற மழையை அமிர்தமென்றார். மழையே உலகம் செழிப்புற நடப்பதற்கு காரணமாததல்.

தீபாவளி கொண்டாட்டம் குடும்பத்தலைவனின் திண்டாட்டம்

★

தீபாவளி பண்டிகையை பலர் பலவாறு சொல்லினும் ஒருசிலர் வாதத்துக்கு சொல்வது போல் மக்கள்குதூகலமாய் பலகாரங்களை உண்டு உடுத்தி கொண்டாட ஒரு சில பண்டிகைகளை முதியோர்களால் கொண்டாட ஏற்பாடு செய்யப் பட்ட பண்டிகை என்று கருதுபவர்கள் பெரும் பாலோருண்டு.

தீபாவளியின் கதையானது நரகாசுரனைக் கொன்ற நாளென்றும் நரகாசூரன் கொடியவ னென்றும் அதற்கு மகாவிஷ்ணுவாகிய கிருஷ்ண வதாரத்தில் நரகாசூரனை கண்ணனின் மனைவி சத்தியபாமையாகிய நரகாசூரலின் தாய் கொன்றதாக அந்த புராண வரலாறு கூறுகிறது. அது எப்படியிருப்பினும் நரகாசூரன் சாகும் நிலையில் தானிறந்த நாளை மக்கள் ஞாபகார்த்த மாக கொண்டாடும்படி மகாவிஷ்ணுவிடம் வரம் கேட்டானும் மக்களை மகாவிஷ்ணுவாகிய கண் ணன் மக்களைக்கொண்டாடு[illegible] ணும். நம்மில் குடும்ப பெரியவர்க[illegible] களுக்கு பொருப்பாளிகளானவர்கள் [illegible] இறக்கும்தருவாயில் தனக்கு உண்மை பிரியமான வார்சுகளிடம் சொத்துக்களை உயில் அல்லது செட்டில் மூலம் ஒப்படைப்பது வழக்கம். அது போல் நரகாசூரன் இறக்கும் தருவாயில் தனக் கொன்றும் கேளாமல் தன் நாட்டு மக்கள் சுகித் திருக்குமாறு குதூகலமடையும்படி செய்ய தன் ஞாபகார்த்தமாய் நடத்தச் செய்யுங்கள் என்று இறக்குந்தருவாயில் கேட்டிருந்தால் குடும்பத் தலைவன் உயிருடன் இருக்கும்போது தன் அடைய பிரியமான வார்சுகளிடம் காட்டிவந்த அன்பு போல் நரகாசுரன்மக்களிடம் அன்புடனிருந்தான் என்பது தெளிவாகிறது.

தங்கள் வீட்டில் யாரேனும் இறந்தால் கொண்டாடாமல் நிறுத்துவதுபோல் நிறுத்தி யிருக்கலாம் ஆயினும் வைணவர்கள் மகாவிஷ்ணு வால் பிறப்பிக்கப்பட்ட உத்திரவாயிற்றேஎன்று கொண்டாடவேண்டியது அவசியம் எனத் தோன்றினும், முழுமுதற் கடவுளான பிறப் பிறப்பற்ற சிவபெருமானை பின்பற்றும் சைவ மெய்யன்பர்கள் அதிலும் ராமா என்னும் சொல் செவியில் புகாவண்ணம் சிவா என்று உச்சரித்து வரும் சிவத்தொண்டர்களும் இதை பண்டிகை யாக கொண்டாட எப்படி ஒப்புக்கொண்டார் களோ? அதை சைவமெய்யன்பர்களும், பொது மக்களும் சிந்தித்தற்குறியது.

அந்த பண்டிகையை கொண்டாட சொன் னது எப்படி இருப்பினும் நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் விவசாயிகள் விளைபொருள்களை கொண்டே தேவையான வாழ்க்கை யின்பங்களை அடையவேண்டியவர்கள். அப்படியிருக்க ஒரு விளைபொருளும் விளைந்து சாவதானமாய் பொருள் கைக்கு கிடைக்காத இந்த நாளில் சாதாரண 10 ஏக்கர் நிலத்துக்கு குறைந்த குடும்பம் தானியங்கள் விளைந்து வெளியெடுக்க முடியாத நிலையில் அந்த தானியங்களுக்கு முன் பணமாக 100 ரூபாய் கடனுக்கு ரூ. 150-க்கு தானியத்தை கொடுப்பதாய் முன் அடகுவைத்து அந்த ரூபாய்களைக் கொண்டு தீபாவளிக்காக ஏக காலத்தில் உடைகளுக்கு பலரும் கூடி வியாபாரி யிடத்தில் சொன்னல் ஜப்பு துணி பொறை பிடித்து மறைத்துள்ள சாக்குகளும் கைதேர்ந்த வியாபாரிகள் அவசரத்தில் கூட்டத்தில் அளக்கும் போது முழத்துக்கு ஒரு விரல் வீதம் குறைத்து

…, தீபாவளித் தையல் …டைகாரர் தனித் தையல் தைப் …தகளும், மனைவியாரும் கூடவே கடைக்கு… து அல்லது வீட்டில் கொண்டுபோய் காட்டியசேலை ஜாக்கட் துணி ரகங்கள் அண்டை வீட்டார் பெருந்தனவந்தர்கள் எடுத்ததைப் பார்த்து அதைப்போல் கேட்டும் கடன் வாங்கிய கதையை குடும்பத் தலைவன் பலமுறை சொல்லியும் கேளாகாதுடன் வருஷத்துக் கொருநாள் கூட பிடித்தமானதை தனக்குச் செய்யவில்லை என்ற கூச்சலும் ஒத்தக்குரலில் ஒப்பாரியும் ஒரு சிலர் அழுதழுது மூக்கை சிந்தி, சிந்தி அன்றைய பலகாரங்களில் படும்வண்ணம் சளி சிற்றுதலும் குழந்தைகள் பலரானால் ஒன்றுக் கொன்று மற்ற பெரியவீட்டுப் பையன்களைப் பார்த்து அவர்களுக்குக் கொடுத்த உடையைப் போல் எடுக்கச்சொல்லி அடம்செய்து அழுவதும் குடும்பத்தலைவன் பெற்ற தீபாவளியை சபித்து ஏ தீபாவளியே நீ ஏன் இந்த ஏழையிடம் வந்தாய்?

நல்லதொரு தைமாதத்தில் வந்திருப்பாயானால் என் அருமை மனைவியும், அரும்புதல்வர்களும் கேட்டதை வாங்கிக்கொடுக்க அந்த கடன்வாங்கிய பாவியிடம் அதிகம் கொடுத்த வட்டிப்பணம் ரூ. 50யும் போட்டு அவர்களிஷ்டத்தை பூர்த்திசெய்யலாமே நீ ஏன் அர்ப்பிசியில் வரும்படி எனக்கு ஆணையிட்ட கண்ணன் காலத்தையறியாமல் செய்தான். பாழும் கடவுளே என்னை ஏன் இப்படி சோதனைக்கு ஆளாக்குகிறாய் என்று கடவுளை திட்டுகிற தலைவர்களும் அடிதடியில் இறங்கி குதூகலம் கொடுமைக்களமாய் மாறி சண்டைசச்சரவுடன் தீபாவளிக் கொண்டாட்டமான பண்டிகை துக்க நாளாக மாறாமலிருக்குமா என்றால் இராது என்பது ஒன்றிரண்டு வீடுகள்தான் சொல்லலாமோ என்னமோ நாமறியோம். வாசகர்களுக்கு நன்கு தெரியும்.

மக்கள் குதூகலமடையவும், பலகாரங்களும் உடைகளும் அவசியந்தான். ஆனால் உடைத் தேவையானபோது விளைபொருள்கள் விளைந்து தானியங்கள் நல்ல விலையில் நட்டமில்லாமல் உழைப்பால் கிடைத்த விளைபொருளை தரகன் நடுவில் கொள்ளை கொள்ளாதபோது நேரில் நல்ல விலையில் விற்கும் நாளில் கொண்டாடினால் என்ன தொழிலாளர்கள் தங்கள் முதலாளிகளாகிய எஜமானரிடம் தீபாவளி பண்டிகையன்று வரும்படி இனாம் வாங்க வாய்ப்பாக எண்ணுகிறார்களே அது இனாமாகக் கொடுப்பதாய் பொருளா? மீளா அடிமையில் வைக்கவும் தொழிலாளிகள் கணக்குப்பார்க்காமல் முதலாளிகளுக்கும் எஜமானர்களுக்கும் உழைக்கும் உழைப்புக்கு கணக்கு தெரியாமல் மறைத்து வைத்து வேலை வாங்கும் தந்திரம் அல்லவா?

இனாம் கொடுப்பது உங்களுடைய உழைப்பை உரிஞ்சி சுகபோகிகளாய், சோம்பேறிகளாய் வாழுபவர்கள் உழைப்பாளிகளாகிய நீங்கள் இன்னும் அயராதுழைத்துக் கொடுக்க உங்களைத் தயார் செய்வது என்றுணருங்கள். உழைப்பு மதிப்புக்கு எள்ளளவாவது ஈடுகட்டக் கூடிய இனாமா அதுவுமிருக்காது. இதை நாம் சொல்லவில்லை தொழிலாளிகளின் ஒவ்வொருவரின் உள்ளமும் சொல்லும். வேண்டுமா இந்த இனாம்? வேண்டுமா இந்த பண்டிகை? நீங்களே கூறுங்கள்.

கனம் கலெக்டர் அவர்கள்

திருச்சிராப்பள்ளி

பஸ் விஷயமான விண்ணப்பம்.

நம் ஜில்லாவில் பல பாகங்களிலும் பஸ் வசதி மிகவும் குறைவாயுள்ளது. அநேக பிரயாணிகள் பிராணிகள் போல் அவதிப்படுகின்றனர். ஓவர்லோடு, டபுள்லோடு என்றும் விஷயம் தற்காலிகமாக எல்லா லயன்களிலும் நிறுத்தப்பட்டுள்ளது. தங்கள்முயற்சியென அறிந்து மட்டற்ற மகிழ்வெய்தினோம்.

12--10--50 வரை திருச்சி, பெரம்பலூர் லயனில் சந்திரா ட்ரான்ஸ் போர்ட்டில் அந்தபழக்கத்தை விடவில்லை ஓவர்லோடும் கண்டிப்பாக தடுக்கபபட வேண்டும் அதிக பஸ்கள் எல்லா லயினிலும் விட வேண்டும். பர்மிட் கோறும் மனுதார்களில் திரு. R. வேணுகோபால் ரெட்டியார் (ஸ்ரீரங்கம்) போன்ற தக்க, மிக்க பணக்காரர்களுக்கு தக்க கண்டிஷன்களோடு பர்மிட் கொடுக்கலாம். பொதுநல சேவையாக விரும்பி ரெட்டியார் செய்வார். நிறம்ப உள்ள பொருள் குறைந்தாலும் மோசமில்லை,

கீழப்பழுவூர்.
21—11—50

இவ்வனம்,
C. முத்து ரெட்டியார்.

ஜெயங்கொண்டம் நேதாஜி வாலிபர் சங்கத்தாரால் **10—11—50** வெள்ளிக்கிழமை மாலை 5-மணிக்கு காந்தி சதுக்கத்தில் குடந்தை ஸ்ரீ விபூதி R. வீரமுத்து சுவாமிகள் சொற்பொழிவாற்றுவார்கள். அன்பர்கள் அனைவரும் வருக. [ஒலிபெருக்கி உண்டு]

தீபாவளி

பா. ஸ்டாலின்

★

எனது அன்பார்ந்த பாட்டாளி மக்களே, பொது மக்களே! மற்றும் உள்ள வருங்கால சிங்கங்களே! நீங்கள் தீபாவளி கொண்டாடாதீர்கள். ஏன் என்றால் அது திராவிடனை ஆரியன் கொன்றதாக புராணக்கதை ஆனால் உண்மை என்று நாங்கள் கூறவில்லை. ஆரிய புராணம் கூறுகிறது. அந்த பொய்க்கதையின் பொருள் யாது என்று சொல்லுகிறேன் கேளுங்கள். முன்காலத்தில் நரகாசூரன் என்று ஒரு அசுரன் இருந்தானும் அவன் மிகக்கொடியவனும் அவன் பல அநியாயங்களை தேவர்கள் என்னும் ஆரியருக்கு செய்தானும். அவனை கிருஷ்ணன் கொன்றானும்; இறந்ததினால் அட்டகாசங்கள் ஒழிந்தனவாம். ஆகவே அச்சுபதினத்தை கொண்டாட வேண்டும் என்று ஒரு பொய்கதை ஆரிய புராணம் கூறுகிறது, சரியென்று வைத்துக்கொள்வோம் நரகாசூரன் அட்டகாசம் செய்ய காரணம் என்ன? அனுவிசயமாக எரியும் நெருப்பில் நெய்யை கொட்டுகிறான். இப்பேர்பட்ட பஞ்சகாலத்தில் நெருப்பில் வீணாக நெய்யை கொட்டுகிறாயே என்று பல வீணான சடங்குகளால் ஏமாற்றுவதை கண்டித்தால் இதைக் கூறினால் கொடுமைக்காரனா? பிறகு பார்ப்போம். அவனைக் கொன்றவன் யார் என்றால் கடவுள் என்று பெயரைச் சொல்லிக்கொண்டு ஆபாசமான முறையில் காமலீலைகள் புரிந்த கண்ணன் அல்லவா?

இன்னும் கரையில் சேலைகளை அவிழ்த்து வைத்துவிட்டு பெண்கள் தண்ணீரில் வந்து குளிக்கும்போது சேலையை திருடிகொண்டு வருவதுதான் கடவுள் செய்யும் வேலையா? எண்ணிபாருங்கள் தோழர்களே! இதுமட்டுமா, திருடுவதில் முதல் ரகம் இப்பேர்பட்ட கடவுளின் ஆபாச குற்றத்தை கண்டிக்க போன திராவிடனை கொன்றான். இதற்கு தமிழர்களாகிய நாம் பண்டிகை கொண்டாடினால் இதைவிட வெட்கக்கேடு வேறென்ன இருக்கிறது. இந்த கதையை புராணம் கூறுகிறதே அதை எப்படி நம்பமுடியும். ஆரிய அட்டகாசங்களை ஒழிக்க துணிந்தான் நரகாசூரன் அவன் ஒழிந்தான் நாம் சுகமாக இருக்கலாம் என்று ஆரிய புராண பொய்கதை நம்பி அவர்கள் வேண்டுமானால் கொண்டாடட்டும் இதற்கு நாம் ஏன் கொண்டாட வேண்டும். இனிமேலாவது தீபாவளி கொண்டாடாது இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

செய்திகள்

சென்னையில் த. நா. கா. க. தலைவர் திரு. K. காமராஜ்நாடார் அவர்களை த. நா. செ. கா. பெடரேஷன் துணைத்தலைவர் டாக்டர்; D. T. ரஜன் அவர்கள் 29—10—50ல் சந்தித்து எதிர்கால பொது தேர்தல் சம்மந்தமாக பேசினார்கள் திரு. நாடார் அவர்கள் விரைவில் முக்கிய தலைவர்களை சந்தித்து ஓர் நல்ல முடிவு செய்வதாக கூறியுள்ளார்கள் மற்றும் தியாகிகள் பேரில் ஹரிஜனங்களின் நிலங்கள் பறிக்கப்படுவதைக்குறித்து கூறியதற்கு திரு. நாடார் அவர்கள் அவ்வாறு ஹரிஜனங்களின் நிலங்களை பிடுங்கக்கூடாது என்பதற்காக பல உத்திரவுகள் சர்க்கார் பிறப்பித்துள்ளது என்றும் அப்படி பிடுங்கப்பட்டிருந்தால் அதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியுள்ளார்கள்.

டாக்டர் D. T. ராஜன்,
த. நா. செ. கா. பெடரேஷன் துணைத்தலைவர்,
திருச்சி.

ஃ ஃ ஃ

நூல் விநியோக குறை.

உ. தாலுக்காவிலுள்ள 20 to 40 நெ. 4435 கைத்தறிகளும், 60x80x100 நெ. கைத்தறிகள் 1250 ஆக கிட்டத்தட்ட 5685 தறிகாரர்களும் திருச்சி அழகப்பா பாலமலை ரெங்கநாதன் கம்பெனிகளில் கிடைக்கும் 5 பவுண்டு 2½ நூல்களை வாங்க இத்தனைபேரும் அங்கே போவது சரியா? அவர்கள் ஒரு பிராஞ்சு ஜெயங்கொண்டத்தில் வைப்பது சரியா? நூல் வியாபாரிகள் தறிகாரர்களை 5 மைலுக்குமேல் நடக்கவிடக்கூடாது என்ற சர்க்கார் ஜி. ஓ. என்ன ஆயிற்று கவனிப்பார்களா?

ஃ ஃ ஃ

விக்கிரமங்கலம் நடு நிலைப்பள்ளி நிதி வசூல் 3-வது லிஸ்டு.

திருவாளர்கள்.	ரூ. அ. பை.
A. R. சீனிவாசன், அம்பாப்பூர்.	50—0—0
M. மருதமுத்துமூப்பனார், அரசநிலை இட்டபுரம்	25—0—0
A. வேலாயுதம்பிள்ளை, விக்கிரமங்கலம்.	25—0—0
கி. முத்துசாமி படையாச்சி, ஜீமநத்தம்.	5—0—0
	105—0—0
முன் வசூல்.	400—0—0
ஆக மொத்தம்.	505—0—0

நிதி அனுப்ப வேண்டிய விலாசம்:

A. R. சீனிவாசன்,
காரியதரிசி
விக்கிரமங்கலம் நடுநிலைப்பள்ளி கட்டிட கமிட்டி
அம்பாபூர், குணமங்கலம் P. O.

★ பணக்காரன் யார்...? ★★★★★★

S. S. R. சிவகுருநாதன்.

★

நாட்டிலே எங்குபார்த்தாலும் ஏழை பணக்காரன் என்ற வார்த்தைகள் கலவாத பேச்சே பார்க்கமுடியவில்லை. "உங்களைப்போன்ற பணக்காரர்களுக்கு என்ன சார் குறை" என்று பேசுவது சர்வ சாதாரணமாகிவிட்டது. உண்மையிலேயே அவனுக்கு எதைஎடுத்தாலும் குறைதான். பணக்காரன் முதலாளி-செல்வந்தன் யார் என்பது சிறிது ஆராய்ச்சிக்குரியது

இப்படி அழைக்கப்படும் ஒருவன் எல்லா சுகத்தையும் அனுபவிப்பவன் எல்லா நலன்களையும் பெற்றவன் ஒரு குறையுமற்றவன் என்றுதான் எல்லோராலும் கருதப்படுகிறான். உண்மையிலேயே அப்படித்தானா என்பதை முடிவுசெய்தால் உண்மை பணக்காரன்—செல்வந்தன்—முதலாளி யார் என்பது விளங்கிவிடும். முதலில் செல்வந்தன் யார் என்று பார்ப்போம். "செல்வம்" என்ற சொல்லுக்கு 'பணம்' என்று மட்டும் பொருள்கொள்வது கூடாது, வீடுவாசல், நிலபலம் குழந்தைகுட்டிகள் என்று சொல்லுகிறார்களே அவை அனைத்துமே மனிதனுடைய செல்வங்களாகும். அவை மேழிச்செல்வம், மக்கட் செல்வம். பொருட்செல்வம் என்று சொல்லப்படும். அதாவது ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் இன்பம் அளிக்கவல்ல அவசியமானவை யாவுமே செல்வங்கள் என்றுதான் சொல்லப்படுகிறது. ஆகவே அவை அனைத்தையும் நிரம்பப்பெற்றவன் செல்வந்தன் ஆகிறான். குறைவாய்ப் பெற்றவன் தரித்திரவான் ஆகிறான். நிறைவு குறைவு என்பது அவரவர்களுடைய மனதைப்பொறுத்தது.

ஒரே ஒரு கந்தல் வேட்டியையுடையவன் ஒருகிழியாத நல்ல வேட்டிவாங்க வேண்டுமென்ற எண்ணத்தையே மனதில்கொண்டு ஏங்கிக்கிடக்கிறான். நல்லவேட்டி சட்டை உடைய ஒருவன் 150 ரூபாயில் ஒரு சூட் தைக்க வேண்டுமென்ற ஆவல் மேலீட்டால் அவதிப்படுகிறான். வில்வண்டி வைத்திருக்கும் ஒருவன் பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள "வாக்சால்" காரில் சவாரி செய்யும் நாள் என்றுவருமோ என்ற நினைவுடன் நிம்மதியற்று காலங் கழிக்கிறான்.

கடனாளி ஒருவன் தான் கடனைக்கொடுக்கவேண்டிய தொகையை நினைந்து பெருமூச்சுவிடுகிறான். முதலாளி ஒருவன் தான் கடனைக்கொடுத்த, தனக்கு வரவேண்டிய கடன் தொகையை நினைத்து பெருமூச்சுவிடுகிறான் ஆகவே மனக்குறை உள்ள யாரும் வாழ்க்கையில் நிம்மதி காணுவதில்லை. எவ்வளவுதான் ஒருவன் பெற்றிருந்தாலும் அவனுக்கிருப்பது குறைவாகவே தோன்றுகிற காரணத்தால் அவன் தான் தரித்திரவான் ஆகிறான். அவன் எப்படி செல்வந்தன் ஆகமுடியும், முடிவாகக் கூறுமிடத்து ஒருமனிதன் தனக்கு என்னென்னதேவை என்று கருதுகிறானோ, வாழ்க்கையில் எந்தவிதமான சுகத்தை அனுபவிக்க வேண்டுமென்று நினைக்கிறானோ, எந்தநிலையில் வாழவேண்டுமென்று விரும்புகிறானோ எந்த அளவோடு அவனுடைய மனம் பூரணதிருப்தி அடைகிறதோ அவ்வளவையும் பெற்று எவன் நிம்மதியாகவும் திருப்தியாகவும் காலங்கழிக்கிறானோ அவனே செல்வந்தன் என்று சொல்லத்தக்கவன் ஆகிறான். எவ்வளவு இருந்தும் "இன்னும் தேவை தேவை" என்று சொல்லிக்கொண்டு இருப்பதையும் அனுபவிக்க மனமில்லாமல் காலங்கழிப்பவன் முழுதரித்திரவான் ஆவான் இதனால்தான் "போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து" என்று சொன்னார்கள் Contented mind is a Continual feast. என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள்.

அடுத்தபடியாக பணக்காரன் — முதலாளி யார் என்று பார்ப்போம். இந்த இரண்டு சொற்களும் கிட்டத்திட்ட ஒரே பொருள் கொடுப்பவைதான்.

பணத்தையுடையவன் பணக்காரன். அந்த பணத்தை வியாபாரத்தில் புகுத்தி முதல்போட்டு தொழில் செய்பவன் முதலாளி. 10 ரூபாய் கையிலுள்ளவன் 1000 ரூபாய் உள்ளவனை முதலாளி என்கிறான். 1000 உள்ளவன் ஒரு லக்ஷம் உள்ளவனை அப்படிச் சொல்கிறான் லக்ஷம் உள்ளவன் பல கோடியுள்ளவனை முதலாளி என்று கூப்பிடுகிறான். படிப்படியாக இப்படி போகிறபோது 100 ரூபாய் முதலாளி பணக்காரனா அல்லது கோடி ரூபாய்க்காரன் பணக்காரனா என்பதுதான் கேள்வி.

நமது தென்னாட்டில் சுமார் பல லக்ஷம் சொத்துடையவர்கள் பணக்காரர்களாக கருதப்படுகிறார்கள். ஆனால் வடநாட்டிலுள்ள பணக்காரர்களை இவர்களோடு ஒப்பிட்டுபார்த்தால் மடுவுக்கும் மலைக்குமுள்ள வித்தியாசம் காணமுடியும். வடநாட்டுப் பணக்காரர்களிடமுள்ள பல இரும்புபெட்டிகளுள் ஒன்றின் மதிப்புகூட பெறமாட்டார்கள். நம் தென்னாட்டு லக்ஷாதிபதிகள் தென்னாட்டு மில் முதலாளிகளின் மில்கள் அவ்வளவையும் விற்றாலும்கூட வடநாட்டு முதலாளி ஒருவரின் கட்டடத்திற்கு ஈடுசெய்யமுடியாது. இந்நிலையில் பணக்காரன் - முதலாளி யார் என்பதையும் தென்னாட்டு அகராதிகளில் மேற்கண்ட வார்த்தைகளுக்கிடமுண்டா என்பதையும் நீங்களே யோசித்துப் பாருங்கள்.

ஆசிரியர் குறிப்பு:— இக்கட்டுரையை ஆதரித்தோ எதிர்த்தோ எழுதும் கட்டுரைகள் வரவேற்கப்படுகிறது. அவற்றுள் சிறந்தவைக்கு அன்பளிப்பு அளிக்கப்படும்.

— ஆசிரியர்.

உங்கள் வியாபாரம் செழிக்க —
— பொய்யாமொழியில்
— விளம்பரம் செய்க.

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

திரும்பப்பெறுகிறான் என்றும், அத்திரி முனிவருடைய கண்ணிலிருந்தும், அக்கினி தேவனுடைய முகத்திலிருந்தும் பிறந்தான் என்றும கீர்த்தியில் மேம்பாடுடையன் என்றும் கூறுகிறார்.

(இ-ள்) பத்து இரட்டியில்—(சந்திரன்) இருபதில், ஈரிரண்டு—நான்கு, ஒழிந்த—நீங்கிய, பல் கலையோன்—பதினாறாகிய மிகுதியான கலைகளையுடையவனும், மித்திரற்கு—சூரியனுக்கு, அவை—அப்பதினாறுகலைகளையும், முன்கொடுத்து—தேய்பிறைக்காலத்தில் முதலிற் கொடுத்து, மீளவும்—திரும்பவும் வளர்பிறைக்காலத்தில், கவர்வோன்-இழுத்துக்கொள்பவனும், அத்திரிப்பெயர்-அத்திரி என்னும் பெயரையுடைய, அந்தணன்—முனிவனது அம்பகந்தனிலும்—கண்ணிலும், சித்திரம்—அழகிய கனல்—அக்கினிதேவனுடைய, முகத்தினும் முகத்திலும் பிறக்து—தோன்றி, ஒளி—புகழினால், சிறந்தோன்—மேம்பட்டவனுமாவன். (எ—று.)

(இ—பொ) சந்திரன் இருபதில்நான்கு நீங்கிய மீதி பதினாறாகிய மிகுதியான கலைகளையுடையவனும், சூரியனுக்கு அப்பதினாறு கலைகளையும் தேய்பிறைக் காலத்தில் முதலிற்கொடுத்துத் திரும்பவும் வளர்பிறை காலத்தில் அப்பதினாறு கலைகளையும் இழுத்துக்கொள்பவனும், அத்திரி என்னும் பெயரையுடைய முனிவனது கண்ணிலும், அழகிய அக்கினிதேவனுடைய முகத்திலும் தோன்றிப் புகழினால் மேம்பட்டவனுமாவன், என்பதாம்.

குறிப்பு:— முன்பு ஆராய்ந்த செய்யுட்களில் சந்திரன் விஷ்ணுவினுடைய இருதயத்திலும். திருப்பாற் கடலிலும் பிறந்தான் என்று கண்டோம். இச்செய்யுளில் சந்திரன் அத்திரி முனிவனுடைய கண்ணிலும், அக்கினி தேவனுடைய முகத்திலும் பிறந்தான் என்று கூறப்பட்டிருக்கிறது ஆகவே சந்திரனது பிறப்பிடங்கள் விஷ்ணுவினது இருதயம், திருப்பாற்கடல். அத்திரி முனிவனது கண், அக்கினிதேவனுடைய முகம் என்ற நான்காகின்றன இந்த நான்கிடங்களிலும் பிறந்ததாகக் கூறப்படுகின்ற—சந்திரர்கள் ஒருவரா? அல்லது வெவ்வேறானவர்களா? என்பது ஆராய்ச்சிக்குறிய தொன்றாகும். ஆனால் இப் பாரத நூலில் மேற்கூறிய நான்கிடங்களிலும் பிறந்ததாகக் கூறப்படுகின்ற சந்திரன் ஒருவனே என்பது உற்று நோக்கின் விளங்கும். இங்ஙனம் ஒரே சந்திரனை வேறு வேறாக நான்கிடங்களில் பிறந்தான் என்றுகூறவேண்டிய அவசியம் என்ன? ஒருவனை ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பிறந்தான் என்று கூறினால் அவனது புகழ் அதிகரிக்கும் என்ற நோக்கமா? அல்லது அவனது கீர்த்தி மேம்பட வேண்டும் என்ற கருத்தா? யாதோ? அறிகிலம். அன்றியும் மேற்கூறிய பிறப்பிடங்கள் இருதயம், பாற்கடல், கண், முகம் என்பவையாகும். இயற்கைக்கு விரோதமாக ஒருவன் இந்த நான்கு இடங்களிலும் பிறப்பது எங்ஙனம்? என்பது ஊகிக்கற்பாலது.

—தொடரும்,

ஆசிரியர் குறிப்பு:- விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புக்கும் இதற்கும் பொருந்தாது கற்பனைகளான பிறப்பும் தன்மையுமான சுருதி, யுக்தி, அனுபவத்திற்கும் பொருந்தாமை காண்க.

OFFICE OF THE REGISTRAR ... MADRAS ... 1950

திருச்சியில் 7—10—50, ...

சென்னை மாகாண கௌரவ ஹரிஜன ...

...னம், V. பாஷ்யம் அய்யங்கா... அவர்கள் விஜயம்.

திருச்சி ஜில்லா செடியூல்டு காஸ்ட் பெடரேஷன் பொதுக் காரியதரிசியும் தமிழ்நாடு செடியூல்டு காஸ்ட் பெடரேஷன் துணைத்தலைவருமான Dr. D. T. ராஜன் அவர்கள் ஷை டைரக்டர் அவர்களை சந்தித்து தி. தா. செம்பட்டிலுள்ள ஹரிஜனங்களுக்கு வீட்டுமனை அடமானம், கிணறு, கைத்தொழில் பள்ளி, மத்தியதரப் பள்ளி ஆகியவைகள் சாங்ஷன் செய்யக்கோரிய மனுக்களும் தி. தா. கொத்தமங்கலம் ஹரிஜனங்களுக்கு கூட்டுறவு அங்கத்தினர் மூலமாக வீடு கட்டிக்கொடுக்கக் கோரியமனுவும், கு. தா. மாயனூர் தேசிய சர்வீந்திய கைத்தொழிற்சாலையை மீண்டும் நடத்தக் கோரிய மனுவும் கொடுக்கப்பட்டது. ஜில்லா வெல்பேர் ஆபீசர் அவர்களுக்கு உதவி கலெக்டர்களுக்குள்ள அதிகாரம் கொடுத்து கார் வசதியும் கொடுக்க வேண்டுமெனவும், ஆபீசில் அதிகமான வேலை இருக்கிறபடியால் ஒரு மானேஜரும் ஒரு அப்பர் டிவிஷன் கிளார்க்கும் அதிகமாக்கப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது கனம் டைரக்டர் அவர்கள் தனது அனுபோகத்தின் பேரில் ஷை ஜில்லா அதிகாரிகளுக்கு ஷை கண்டவசதிகள் கொடுக்கவேண்டுவது அவசியந்தான் எனவும் அது சம்பந்தமாக கவர்ன்மெண்டுக்கு சுமார் மூன்று முறை எழுதியும் சாதகமாக பதில் கிடைக்கவில்லை யெனவும் அண்மையில் இராமநாதபுரம் விஜயம் செய்தபோது டிப்டி கலெக்டர் அந்தஸ்திலுள்ள வெல்பேர் ஆபீசர் அவர்களுக்கும் போக்குவரத்து வசதி மிககஷ்டமாக இருக்கிறதாக கூறியதாகவும் மீண்டும் கனம், ஹரிஜன மந்திரியைகண்டு பேசியதாகவும் கூறினார்கள். மேலும் உருப்படியாக ஹரிஜனங்களுக்கு உணவுக்கான நிலங்கள் வீட்டுமனைகள், கல்விவசதிகள் செய்வதுதான் அவர்களை மேன்பாட்டிற்கு கொண்டுவர ஏதுவாகுமென கூறியுள்ளார்கள். பின்பு பெண்கள் ஹாஸ்டலை பார்வையிட்டார்கள். மனுக்கள் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆவன செய்வதாககூறியுள்ளார்கள்.

பொய்யாமொழி

வார இதழ்

சந்தா விபரம்

ஆண்டு			ஆறு மாதம்			தனிப்பிரதி		
3	0	0	1	12	0	0	1	0

கதை, கட்டுரைகளில் காணப்படும் பெயர்கள், யாவும் கற்பனையேயன்றி யாரையும் குறிப்பிடுவன அல்ல.

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press, (Branch) Jayankondacholapuram.
Edited and Published by M. Bhaskaranar, 17, Ketcheri Street, Jayankondacholapuram.